# இன்று பொதுக்காலம் முப்பத்தோராம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - A

# 2023-11-05

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் மலாக்கி நூலிலிருந்து வாசகம்* 1: 14b-2: 1-2,8-10 ,

*திருப்பாடல்* 131: 1. 2. 3 ,

*திருத்தூதர் பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்* 2: 7b-9,13 ,

*மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 23: 1-12 )

*திருப்பலி முன்னுரை*

*என் நெஞ்சம் அமைதிபெற உம் திருமுன் வைத்துக் காத்தருளும்.*

*அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று பொதுக்காலம் முப்பத்தோராம் ஞாயிறு. நம் தந்தையாம் ஆண்டவரின் திருச் சந்நிதியில் நன்றியோடும், விசுவாசத்தோடும் ஒன்று கூடியுள்ளோம். இறைவனுக்கு நேர்மையான உள்ளத்தோடு பணியாற்றுவதும், முன்மாதிரிகையான வாழ்வும், தாழ்ச்சியும் கிறீஸ்தவ வாழ்விற்கு மிகவும் அவசியம் என்பதை இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு எடுத்தியம்புகின்றன. அத்தோடு உண்மையான விசுவாசத்தோடு வாழ்பவர்களில் தான் இறைவார்த்தை வல்லமையோடு செயல்படுவதைக் காணலாம் என்னும் செய்தியும் நமக்குத் தரப்படுகின்றது. இந்தச் சிந்தனைகளை நாம் நம் மனத்தில் ஆழமாகப் பதித்து, தாழ்ச்சியுடையவர்களாகவும், வெளிவேடமற்றவர்களாகவும் வாழ வரம் கேட்டுச் செபிப்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. *என் ஆற்றலாகிய தந்தையே இறைவா!*

*உமது திருச்சபையிலுள்ள திருத்தந்தை முதல் பொதுநிலையினர் வரையுள்ள நாங்கள் அனைவரும், எம் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் எம் ஆண்டவராகிய உம்மையும், எம் அயலாரையும் அன்புச் செய்யவும், அன்பு, இரக்கம், நற்பண்புகள் ஆகியவற்றோடு வாழவும், வளரவும் வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*இருதயத்தில் சாந்தமும் தாழ்ச்சியுமுள்ள இறைவா!*

*உம்முடைய பிள்ளைகளாகிய நாங்கள், தாழ்ச்சி, பொறுமை, ஆகிய தலைசிறந்த பண்புகளை வாழ்ந்து அனைவரையும் அன்பு செய்து வாழ எமக்கு அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*போற்றுதலுகுரிய ஆண்டவரே எம் இறைவா!*

*பல்வேறு கருவிகள் மூலம் தொடர்புகளை வலுப்படுத்தும் வர்த்தக உலகம், தொடர்புச் சாதன உலகம், எம்மைச் சுயநலச் சிறைகளுக்குள் தள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள இவ்வேளையில் நாங்கள் எமக்கடுத்திருக்கும் ஏழை, எளியவர், கைவிடப்பட்டோர், அனாதைகள், விதவைகள் ஆகியோர் தேவைகளை உணர்ந்து அவர்களுக்கு உதவிடும் நல்மனதினைத் தர வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.*

*வானகக் கொடைகளை வழங்கிவரும் எம் இறைவா!*

*எம் நாட்டில் நிலவும் குழப்பமான அரசியல் சூழலில் எம்மை ஆளும் தலைவர்கள் உமது அன்பின் கட்டளைகளை ஏற்று, எங்களின் அடிப்படை உரிமைகள், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் எங்கள் நாட்டையும், எங்கள் மக்களையும் வழி நடத்த தூயஆவியின் வழியாக ஞானத்தை அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*அமைதியின் இறைவா!*

*இன்றைய காலகட்டத்தில் உலகெங்கும் நிலவும் போர்காலப் பதட்டை தவிர்த்திடும். மக்கள் ஒரே குடும்பமாக இவ்வுலகில் வாழ்ந்திட, அன்பும் சகோதரத்துவமும் நிறைந்த வாழ்வு வாழ, உலகநாட்டு தலைவர்களை வழிநடத்தி தேவையான அருள் வரங்களைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*அருட்செல்வங்களால் எங்களை ஆசீர்வதிக்கும் அன்புத்தந்தையே! எம் இறைவா!*

*கிறிஸ்துவின் வார்த்தைகளைச் செவிக்கு உணவாக உட்கொண்ட நாங்கள் மேன்மேலும் அவராகவே மாறச் செய்தருளும். எங்கள் வாழ்வில் எல்லாச் சூழ்நிலைகளிலும், சிறப்பாக எங்களது குடும்ப வாழ்க்கையிலும், கிறிஸ்துவின் மனநிலையை நாங்கள் எமதாக்கிக் கொண்டு ஒருவரையொருவர் ஏற்று, ஒன்றிணைந்து உமதருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*அன்புத் தந்தையே இறைவா!*

*உலகப் பற்றினால் உண்மைக் கடவுளாகிய உம்மை மறந்து வாழும் இளைஞர்கள் நீரே ஆண்டவர், நீரே கடவுள் என்பதை உணர்ந்து உம்மில் புதிய வாழ்வைக் காண மனமாற்றம் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*எம் குற்றங்களையும், குறைகளையும் நினையாத எம் இறைவா!*

*எம் குடும்பங்களில் உள்ள அனைவரும் தத்தம் பணிகளை செவ்வனே செய்யவும், அதன்மூலம் தம் வாழ்வின் நிறைவை மகிழ்வாய் பெற்று உமது சாட்சிகளால் அனைவரையும் அன்புடனும் பாசத்துடனும் வாழ நடத்த தேவையான இரக்கத்தையும் பொறுமையையும் பெற்றிட வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.*